24-04-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 31.03.1989

கருணை மனம் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு

இன்று அன்பு நிறைந்த மற்றும் கருணை நிறைந்த பாப்தாதா தனக்கு சமமாக குழந்தை களை பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்று பாப்தாதா உலகத்திலுள்ள அறிமுகம் இல்லாத (பாபாவை பற்றிய) குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்னை (சிவபாபா) பற்றி தெரியாமல் இருக்கலாம், ஆனாலும் என்னுடைய குழந்தைகள் அல்லவா! பாப்தாதா (தந்தை மற்றும் மூத்த சகோதரன்) என்ற தொடர்பின் மூலம் அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டே பலதரப்பட்ட ஆத்மாக்களுக்கு நேரத்திற்கு தகுந்தாற் போல் ஏதாவதொரு காரணத் தினால் தெரிந்தோ - தெரியாமலோ தற்சமயத்தில் கருணை அதாவது இரக்கத்தின், அவசியம் தேவைப்படுகிறது, மேலும் அவசியத்தின் காரணத்தினால் தான் கருணையின் உருவமான பாபாவை நினைவு செய்கிறார்கள் என்பதை அனுபவம் செய்துக் கொண்டேயிருக்கிறீர்கள். எனவே நாலா பக்கத்திலுமுள்ள அவசியத்திற்கேற்றாற் போல் இந்த நேரத்தில் கருணை நிறைந்த பார்வையை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் முதலாவது வித விதமான பிரச்சனைகளின் காரணத்தினால் தனது மனம் மற்றும் புத்தியின் சமநிலை இல்லாத காரணத் தினால் கருணை நிறைந்த தந்தையை மற்றும் அவரவர்களது இஷ்ட தேவதைகளை கருணை வேண்டி பலர் துக்கத்தோடு குழப்பத்தில் கூக்குரல் இட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் அறியாமையில் இருக்கும் ஆத்மாக்கள் பாபாவை பற்றி தெரிந்துக் கொள்ளாத காரணத்தினால் அவரவர்களின் தர்ம பிதாக்களை மற்றும் குரு மார்களையும் மற்றும் இஷ்ட தேவதை களையும் கருணை நிறைந்தவர்கள் எனப் புரிந்துக் கொண்டு கூக்குரல் இடுகிறார்கள். ஆனால் இந்த ஒரே ஒரு பரம ஆத்மாவான நமது தந்தையை தவிர வேறு யாராலும் இரக்கம் கிடைக்காது என்பதை நீங்கள் அனைவருமே தெரிந்துள்ளீர்கள். பாபா அவர்களுடைய (பக்தர்கள்) ஆசைகளை நிறைவேற்றுவதற்கான காரணம் பாவனையின் பலனை கொடுப் பதற்கான காரணம் ஏதாவதொரு இஷ்ட தேவதையை மற்றும் மகான் ஆத்மாவை நிமித்தமாக (கருவியாக) ஆக்கி விடுகிறது, ஆனால் வள்ளலானவர் ஒருவர் தான் - ஆகையால் தற்சமயத் திற்கு ஏற்றாற்போல் கருணை கடலான தந்தை குழந்தைகளுக்கும் சொல்கிறார் - பாபாவின் உதவி செய்யும் துணை கைகள் பிராமண குழந்தைகளாகிய நீங்கள் தான் ஆவீர்கள். யாருக்கு எந்த பொருள் அவசியமாக இருக்கிறதோ, அவர்களுக்கு அது கொடுத்தவுடன் மகிழ்ச்சியடைந்து விடுகிறார்கள். எனவே மாஸ்டர் கருணை நிறைந்தவர் ஆகிவிட்டீர்களா? உங்களுடைய சகோதர - சகோதரிகளாக தான் இருக்கிறார்கள், உடன் பிறந்த சகோதரனாகவோ, அல்லது உடன் பிறவா சகோதரனாக இருக்கலாம், ஆனால் நமது குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவர். தனது குடும்பத்தை சேர்ந்த தந்தையை பற்றி அறியாத, குழப்பத்திலுள்ள ஆத்மாக்களின் மீது கருனை மனமுடையவர் ஆகுங்கள். மனதார கருணை காட்டுங்கள். உலகத்திலுள்ள அறியாமல் இருக்கும் ஆத்மாக்கள் மீதும் கருணை காட்டுங்கள். மேலும் அதனோடு பிராமண குடும்பத்தின் முயற்சியாளர்களின் தீவிர முயற்சி செய்வதற்காக மற்றும் சுய முன்னேற்றத் திற்காகவும் கருணை

மனமுடையவர் ஆவது அவசியம் ஆகிறது. சுய முன்னேற்றத்திற்காக தன் மீது கருணை யுடையவராக ஆகும் பொழுது கருணை மனமுடைய ஆத்மாவை சதா எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு இயல்பாகவே வரும். நான் எத்தனை பெரிய உயர்ந்ததிலும் உயர்ந்த பாபாவின் அதே ஆத்மாவாக இருக்கிறேன், மேலும் அதே போன்று தந்தையை போன்று ஆவதற்கான இலட்சியம் உடையவன் என்று தன்மீதும் கருணைக் கொள்ளுங்கள். அதன்படி ஒருவேளை உண்மையான சிரேஷ்ட சுபாவம் மற்றும் சன்ஸ்காரத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால் தன்மீது தானே இதய பூர்வமாக கருணை நிறைந்தவராகி குறைபாடுகளிலிருந்து வைராக்கியத்தை ஏற்படுத்தும்.

அனைத்து குழந்தைகளும் ஞானத்திலும் மிகவும் புத்திசாலியாக இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா இன்று இதைப் பற்றிய ஆன்மீக உரையாடல் செய்துக் கொண்டிருந்தார். புள்ளி சொரூபம் ஆகிவிட்டீர்கள் ஆனால் ஒவ்வொரு பலவீனத்தையும் தெரிந்துக் கொள்வதற்கான கருத்துக்கள் இருக்கிறது. இவ்வாறு நடந்திருக்க வேண்டும், இது செய்திருக்க கூடாது என்பதை தெரிந்திருந்தாலும் கூட புள்ளி சொரூபம் ஆவது மேலும் என்னவெல்லாம் வீணானது பார்ப்பது-கேட்பது மற்றும் தன் மூலம் ஏற்பட்டதை முற்றுப்புள்ளி வைப்பதற்கான புள்ளி வைக்க வருவதில்லையா. ஞான கருத்துக்கள் இருக்கிறது, ஆனால் புள்ளி சொரூபம் ஆவதற் காக விசேஷமாக என்ன அவசியம் இருக்கிறது? தன் மீது இரக்கம் மேலும் மற்றவர்களின் மீது இரக்கம். பக்தி மார்க்கத்திலும் கூட உண்மையான பக்தர்களும் இருப்பார்கள், மற்றும் நீங்களும் உண்மையான பக்தர்களாக ஆகிவிட்டீர்களா, ஆத்மாவில் பதிவுகள் நிரம்பி இருக்கிறதல்லவா. எனவே உண்மையான பக்தர்கள் சதா கருணை மனமுடையவர்களாக இருக்கிறார்கள், ஆகையால் அவர்கள் பாவ கர்மத்தினை பார்த்து பயப்படுகிறார்கள். பாபாவிடம் பயப்படுவ தில்லை. ஆனால் பாவத்திடம் இல்லை. அதனால் தான் பாவ கர்மத்திலிருந்து விடுபட்டு இருக் கிறார்கள். எனவே ஞான மார்க்கத்திலும் யார் உண்மையான கருணை மனமுடையவர்களாக இருக்கிறார்களோ - அதில் 3 விஷயங்களிலிருந்து விலகியிருப்பதற்கான சக்தி இருக்கிறது. யாரிடத்தில் கருணை இல்லையோ அவர்கள் புரிந்துக் கொண்டிருந்தாலும், தெரிந்துக் கொண்டிருந்தாலும் கூட 3 விஷயங்களில் வசப்பட்டு விடுகிறார்கள். அந்த மூன்று விஷயங்கள் - கவனகுறைவு, பொறாமை மற்றும் வெறுப்பு. ஏதாவது பலவீனம் மற்றும் குறைபாட்டின் காரணத்தினால் தான் மூன்று விஷயங்கள் ஏற்படுகிறது. மேலும் யார் கருணை மனமுடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் பாபாவின் துணையாக இருப்பவர்கள், தர்மராஜாவின் தண்டனையிலிருந்து தவிப்பதற்கான நல்ல விருப்பம் வைக் கிறார்கள். பயத்தின் காரணமாக பக்தர்கள் கவன குறைவாக இருப்பதில்லை. அதுபோல பிரமாண ஆத்மாக்களும் பாபாவின் அன்பின் காரணமாக, தர்மராஜாபுரியை கடக்க வேண்டியிருக்காது - இந்த இனிமையான பயத்தினால் (மரியாதையின்) கவனக்குறைவாக இருப்பதில்லை. பாபாவின் அன்பு அதிலிருந்து (தர்மராஜாபுரி) விலக்கி விடுகிறது. தனது மனதின் கருணை கவனக்குறைவை சமாப்தி (முடித்து) செய்து விடுகிறது. மேலும் தனக்காக இரக்க உணர்வு வருகிறது எனவே உள்ளுணர்வு மற்றும் நினைவு எப்படி இருக்கிறதோ, அதுபோன்றே அனைத்து பிராமணர்களும் உலகத்திற்காக தானாகவே இரக்க மனமுடையவர் ஆகிறார்கள். இது தான் யதார்த்தமான ஞானம் நிறைந்த கருணையாகும்.

ஞானம் இல்லாத கருணை நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. ஆனால் ஞானம் நிறைந்த கருணை ஒருபொழுதும் எந்த ஆத்மாவின் மீதும் பொறாமை அல்லது வெறுப்பின் உணர்வு மனதில் உருவாகாது. ஞானம் நிறைந்த கருணையின் கூடவே தன்னுடைய ஆன்மீகத் தன்மையின் நறுமணம் அவசியம் இருக்கிறது. கருணை என்பது தனிப்பட்டு இருக்காது, ஆனால் கருணை மற்றும் ஆன்மீகத்தன்மை இரண்டும் சமநிலையில் இருக்கிறது. ஒருவேளை ஞானம் நிறைந்த கருணையாக இல்லாமல், சாதரண கருணையாக இருந்தால் ஏதாவது ஆத்மாவின் மீது பற்றுதல் ரூபத்திலோ, ஏதாவதொரு பலவீனத்தினால் அவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்துகிறது. பிராபாவம் (தாக்கம் - பாதிப்பு) ஏற்படுத்தக்கூடாது. வெறுப்பும் ஏற்படக்கூடாது, தாக்கம் ஏற்படுத்தக் கூடாது. ஏனெனில் நீங்கள் மனம், புத்தி உட்பட அனைத்தையும் பாபாவின் மீது அர்ப்பணம் செய்துள்ளீர்கள். மனம் மற்றும் புத்தி உயர்ந்ததிலும் உயர்ந்தவர் மீது ஒருபக்கம் இருக்கும் பொழுது, மற்றவர்கள் மீது எப்படி தாக்கத்தை ஏற்படுத்த முடியும். ஒருவேளை மற்றவர்களின் பக்கம் தாக்கப்படுகிறீர்கள் என்றால் அவர்களை என்னவென்று சொல்வது? கொடுக்கப்பட்ட (தானம் செய்த) பொருளை மீண்டும் தனக்காக பயன்படுத்துவது - அடமானம் வைக்கப்பட்ட பொருளை களவாடுவது (திருடுவது) என்று சொல்லப்படுகிறது. மனம் புத்தியை கொடுத்து விட்ட பிறகு உங்களுக்கு யாரிடத்தில் தாக்கம் ஏற்படுகிறது? பாபாவிடம் ஒப்படைத்து விட்டீர்களா? பாதி அளவு கொடுத்து விட்டு, மீதி முள்ளவைகளை வைத்திருக்கிறீர்களா? யார் அனைத்தையும் முழுவதுமாக கொடுத்து விட்டீர்களோ, அவர்கள் கையை உயர்த்துங்கள். பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரத்தின் மகாமந்திரம் என்னவாக இருக்கிறது? மன்மனாபவ. எனவே மன்மனாபவ (மனதினால் பாபாவை நினைவு செய்வது) ஆக உள்ளீர்களா? எனவே ஞானம் நிறைந்த ஆத்மா கருணை மனமுடைய ஆத்மா ஒருபொழுதும் யார் மீதோ, குணங்களின் மீதோ, சேவையின் மீதோ, எந்தவிதத்திலும் தாக்கம் ஏற்படுத்த முடியாது. ஏனெனில் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் இருக்கும் காரணத்தினால் பாபாவின் அன்பு, உதவியின் கூடவே - இதைத் தவிர வேறு எதுவும் தென்படாது. புத்தியில் வரவே வராது. உங்களுடன்தான் எழுந்திருப்பேன், உங்களுடன்தான் உறங்குவேன், உங்களுடன் தான் சாப்பிடுவேன், உங்களுடன்தான் சேவை செய்வேன், உங்களுடன் தான் கர்மயோகியாக இருப்பேன், - அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு இந்த நினைவு சதா இருக்கும். ஏதாவது சிரேஷ்ட ஆத்மாவின் மூலம் சகயோகம் (உதவி) கிடைக்கவும் செய்யும், ஆனால் அவர்களுடைய வள்ளல் யாராக இருக்கிறார்? எனவே ஒரு பாபாவின் பக்கம் தான் புத்தி செல்கிறதல்லவா. உதவியை பெற்றுக் கொள்ளுங்கள், ஆனால் வள்ளல் யாராக இருக்கிறார், இதை மறந்து விட வேண்டாம். ஸ்ரீமத் ஒரு பாபாவினுடையதாகும். ஏதோ ஒரு ஆத்மா உங்களுக்கு நிமித்தமாக (கருவியாக) இருந்து பாபாவின் ஸ்ரீமத்தை நினைவு படுத்து கிறார்கள். எனவே அவர்களுடைய (நிமித்தமானவரின்) ஸ்ரீமத் கிடையாது. ஆனால் பாபாவின் ஸ்ரீமத்தை பின்பற்றி மற்றவர்களையும் கூட செய்ய வைப்பதற்காக நினைவு படுத்துகிறார்கள். நிமித்த ஆத்மாக்கள், சிரேஷ்டமான ஆத்மாக்கள் ஒருபொழுதும் எனது வழிப்படி நடக்க வேண்டுமென்று சொல்லமாட்டார்கள். நான் சொல்வது தான் ஸ்ரீமத் என்று சொல்ல மாட்டார்கள். ஸ்ரீமத்தை திரும்பவும் நினைவுப்படுத்துவது, இதைத் தான் யதார்த்தமான சகயோகம் பெறுவது, சகயோகம் கொடுப்பது என்பதாகும். தாதி, தாதியின் ஸ்ரீமத் கொடுப்ப தில்லை. நிமித்தமாக இருக்கிறார்கள், ஸ்ரீமத்தின் சக்தி

நினைவை ஏற்படுத்துகிறது. ஆகையால் எந்த ஆத்மாவின் மீதும் பிரபாவம் (தாக்கம்) ஏற்படாது. ஒருவேளை ஏதாவது விஷயத்தில் யார் மீதாவது பிரபாவம் ஏற்படுகிறது என்றால், அவர்களுடைய பெயரின் மகிமையில், உருவத்தில் அல்லது ஏதாவது விசேஷத்தன்மையில் பற்றுதலின் காரணத்தினால், பிரபாவத்தில் இருக்கும் காரணத்தினால் புத்தி எங்காவது சிக்கிக் கொள்கிறது. ஒருவேளை புத்தி மாட்டிக் கொள்கிறது என்றால் பறக்கும் கலையில் செல்ல முடியாது. தன் மீதே தானேயான பிரபாவம் ஏற்படுகிறது - எனக்கு மிகவும் நல்ல திட்டம் தீட்டக்கூடிய புத்தி இருக்கிறது, என்னுடைய ஞானம் மிகவும் தெளிவாக இருக்கிறது, என்னை போன்ற சேவை வேறு யாராலும் செய்ய முடியாது. எனக்கு கண்டுபிடிக்கும் புத்தி இருக்கிறது, குணம் நிறைந்தவனாக இருக் கிறேன் - இது தன் மீதும் கூட தாக்கம் ஏற்படுத்தக் கூடாது. விசேஷத்தன்மை இருக்கிறது, திட்டம் தீட்டக் கூடிய புத்தியிருக்கிறது, ஆனால் சேவையின் நிமித்தமாக யார் மாற்றியது? சேவை என்றால் என்ன என்பதை தெரிந்திருந்தோமா என்ன? ஆகையால் சுய முன்னேற்றத் திற்காக யதார்த்தமான ஞானம் நிறைந்த கருணை மனமுடையவர் ஆவது மிகவும் அவசியமாகும். இதன் பிறகு வெறுப்பு, பொறாமை முடிந்து போய்விடும். தீவிர வேகம் இல்லாமல் இருப்பதற்கான காரணம் - பொறாமை அல்லது வெறுப்பு மற்றும் பிரபாவத்தினால் தான் இருக்கிறது. தன் மீதோ, மற்றவர்கள் மீதோ நான்காவது விஷயம் கவனக்குறைவு சொல்லப்படுகிறது. இது நடக்கத் தான் செய்யும், நேரத்தில் தயார் ஆகிவிடுவார்கள். இது தான் அலட்சியத்தன்மையாகும். பாப்தாதா நகைசுவையாக ஒரு விஷயத்தை சொல்லியிருக்கிறார். பிராமண ஆத்மாக்களுக்கு தொலை நோக்கு பார்வை மிகவும் கூர்மையாக இருக்கிறது. ஆனால் அருகாமையில் இருப்பதை பார்க்கும் பார்வை குறைபாடுடன் இருக்கிறது, ஆகையால் மற்றவர் களின் குறைகள் வெகுவாக தென்படுகிறது. மேலும் தனது குறைபாடுகள் தாமதமாக தான் தென்படுகிறது.

எனவே இரக்கத்தின் உணர்வு அனபு நிறைந்ததாகவும் கருணை நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். இதனால் மனதினால் வைராக்கியம் வரும். எந்த நேரத்தில் கேட்கிறீர்களோ, பட்டியில் இருக்கிறீர்களோ, ஆன்மீக உரையாடல் செய்கிறீர்களோ, அந்த நேரத்தில் அப்படித்தான் செய்ய வேண்டுமென்று அனைவரும் புரிந்துக் கொள் கிறார்கள். அவர்களுக்கு (உலகத்தினர்) குறுகிய காலத்தின் வைராக்கியம் வருகிறது, மனதளவில் வருவதில்லை. எது பாபாவிற்கு பிடிப்பதில்லையோ, அதில் மனதிலிருந்து வைராக்கியம் வரவேண்டும். தனக்கே பிடிப்பதில்லை, ஆனால் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வை உழவு செய்யுங்கள், கருணை மனமுடையவராக ஆகுங்கள். பல குழந்தைகள் மிகவும் நல்ல-நல்ல விஷயங்களை சொல்கிறார்கள். யாராவது பொய் பேசும் பொழுது மிகவும் கோபம் வருகிறது என்று சொல் கிறார்கள். பொய்யின் மீது கோபம் வருகிறதா, அல்லது யாராவது தவறு செய்கிறார்கள் என்றால் கோபம் வருகிறதா. கோபம் வருகிறது அப்படியல்ல. அவர்கள் பொய் பேசினார்கள் என்பது சரிதான், அவர்களை தவறாக புரிந்துள்ளீர்கள் மேலும் நீங்கள் கோபம் கொண்டீர்கள் அது சரியானதா என்ன? தவறானவர்கள், தவறானவர்கள் என்று புரிந்துக் கொள்ள முடியும்? அதற்கான விளைவை எப்படி ஏற்படுத்த முடியும். அதன் மீது தனது தவறை பார்ப்பதில்லை, ஆனால் மற்றவர்கள் சொல்லும் சிறிய பொய்யான

விஷயத்தையும் பெரிதுப் படுத்திவிடு கிறீர்கள். அப்படி நேரத்தில் இரக்க மனமுடையவர் ஆகுங்கள். தனக்கு கிடைத்துள்ள பாபாவின் சக்திகள் மூலம் இரக்க மனமுடையவர் ஆகுங்கள், உதவி அளியுங்கள். அவர்களை பொய் பேசுவதிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல இலட்சியம் வைக்கிறீர்கள். இலட்சியம் நன்றாக இருக்கிறது, அதற்கான வாழ்த்துக்கள். ஆனால் ரிசல்ட் (முடிவு) என்னவாக இருந்தது? அவர்களும் தோற்று போனார்கள், நீங்களும் தோற்று போனீர்கள். எனவே தோற்று போனவர்கள் தோற்று போனவர்களை தேர்ச்சி பெற செய்வார்களா என்ன? ஆனாலும் அவர்களை நல்லவர்களாக மாற்றுவது, முன்னேற்றுவது - எங்களுடைய பொறுப்பாக இருக்கிறது என்று பலர் புரிந்துக் கொள்கிறார்கள் ஆனால் பொறுப்பை சரியாக செய்ய வேண்டுமென்று நினைப் பவர்கள் முதலில் தனது பொறுப்பை அந்த நேரத்தில் சரியாக செய்தால் தான், மற்றவர் களையும் பொறுப்பாக இருக்க வேண்டுமென்று சொல்ல முடியும். பலர் நிமித்தமான ஆசிரியர் களாக இருப்பதால் சிறியவர்களுக்கு நாம் தான் பொறுப்பு. இவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும், கற்று தர வேண்டுமென்று புரிந்துக் கொள்கிறார்கள். ஆனால் சரியான ஞானம் என்பது தான் ஆத்மாவின் வருமானமாகும் என்பதை எப்பொழுதும் சிந்தனை செய்யுங்கள். ஒருவேளை நீங்கள் ஆசிரியர் என்ற பொறுப்போடு அறிவுரை வழங்குகிறீர்கள் என்றால் அந்த அறிவுரையின் மூலம் மற்றவர்களுக்கு வருமானம் சேமிப்பு ஆனதா? என்பதை முதலில் பாருங்கள். ஆத்மாவிற்கு வருமானம் ஏற்பட்டதா? அல்லது ஆத்மாவின் வருமானத்தில் சரிவு ஏற்பட்டதா? ஆகையால் திரிகாலதரிசி (மூன்று காலங்கள் உணர்ந்த) நிலையில் நிலைத்திருந்து எந்தவொரு காரியத்தையும் செய்யுங்கள் என்று பாப்தாதா சொல்கிறார். இவர்கள் செய்தார்கள், அதனால் சொன்னேன் என்று நிகழ்காலத்தை மட்டும் பார்க்காதீர்கள். ஆனால் அவர்களின் எதிர்காலம் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதை பார்த்தீர்களா? எது முதலில் ஆதி அனாதி (முதலும் முடிவும் இல்லாத) மனநிலை பிராமண ஆத்மாக்களுக்கு இருந்தது, இப்பொழுதும் இருக்கிறது, மேலும் இருக்கவும் செய்யும். அதன்படி இருக்கிறதா? மூன்று காலங்களையும் சோதனை செய்யுங்கள், எனவே பாப்தாதா என்ன விரும்புகிறார் என்பதை புரிந்துக் கொண்டீர்களா?

சுய முன்னேற்றம் செய்கிறீர்கள் ஆனால் மாற்றம் என்ன கொண்டு வந்தீர்கள்? மகாரதியாக இருக்கலாம், புதியவர்களாக இருக்கலாம் - பாப்தாதாவின் ஒரு நல்ல ஆசை இருக்கிறது, எந்தளவு விரும்புகிறார்களோ, அந்தளவு இப்பொழுது நடைபெறவில்லை. ரிசல்ட்டை சொல்வீர்கள் அல்லவா. பாப்தாதா குறுகிய காலத்தின் வைராக்கியத்தை விரும்புவதில்லை. உண்மையான வைராக்கியம் என்பது - பாபாவிற்கு எது பிடிப்பதில்லையோ, அதை செய்யாமல் இருப்பதாகும். யோசிக்கவும் கூடாது, பேசவும் கூடாது. இதைத்தான் இதயபூர்வமான அன்பு என்று சொல்கிறார். இப்பொழுது கலப்படமாக இருக்கிறது, சில்நேரம் மனதின் அன்பு ஏற்படுகிறது, சிலநேரம் புத்தியின் அன்பு ஏற்படு கிறது. பூ மாலையின் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு மணியோடு நெருக்கத்தில் இருக்கிறது, அன்பானவர்களாக இருக்கிறீர்கள், முன்னேற்றத்திற்காக ஒத்துழைப்பும் தருகிறீர்கள், ஆகையால் (வெற்றி) மாலை உருவாகுவது நிறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் மாலை தயாராக வேண்டும் என்றால் இரண்டு மணிகளும் சமமாக ஒருவர் மற்றொருவரோடு அன்பானவராக இருப்பது. முதலில் 108-ன் மாலை உருவாகும் பொழுது அடுத்த மாலை உருவாகும். பாப்தாதா பலமுறை மாலை

உருவாக்கு வதற்கு அமர்கிறார், ஆனால் இப்பொழுது முடிவடைவதில்லை. அதாவது பாபா அதை (மாலையை) மூன்று சான்றிதழ்கள் இருக்கும் பொழுது தான் (உருட்டுவார்) உருவாக்குவார். - பாபாவிற்கு பிடித்தமானவராக இருப்பது, பிராமண குடும்பத்திற்கு பிடித்தமானவராக இருப்பது, மேலும் தனது யதார்த்தமான முயற்சியின் மீது விருப்பம். மூன்று விஷயங்களை சோதனை செய்தீர்கள் என்றால் மணி கையிலேயே நின்றுவிடுகிறது. மாலையில் வருவதில்லை. எனவே இந்த வருடம் எந்தவொரு சுலோகன் நினைவில் வைப்பீர்கள்? திரிமூர்த்தி பாபா மற்றும் விசேஷமாக மூன்று சம்மந்தங்களின் மூலம் மூன்று சான்றிதழ்களை பெற வேண்டும். மற்றவர்களுக்கு கொடுப்பதில் ஒத்துழைப்பு தருவது. மாலையின் அருகாமையின் மணி ஆக வேண்டும். எனவே சுய முன்னேற்றம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம். பாபா என்ன சொன்னாரோ, அதை பிரம்மா பாபா செய்தார், ஆகையால் வெற்றியடைவதில் நம்பர் ஒன் ஆனார். நல்லது.

பாப்தாதா இந்த ரிசல்ட்டை பார்ப்பார். ஒவ்வொருவரும் தன்னை பாருங்கள், மற்றவர்களை பார்க்க வேண்டாம். சீசனின் கடைசி நாள் என்று அனைவரும் புர்ந்துள்ளார்கள். ஆனால் பாப்தாதா சொல்கிறார் - கடைசி நாள் இல்லை, மாலை உருவாக்குவதில் கடந்த கால சீசனில் நாளாக இருக்கிறது. அனைவருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது மாலையின் மணியை உருட்ட முடியாது, பொருத்தப்படவில்லை. மூன்று சான்றிதழ்களை பெறுங்கள் மற்றும் மாலையில் வாருங்கள். எந்தளவு வெளிப்படையான நிரூபணம் தரக்கூடியவர்கள் வெளிப்படையாக முகம் மற்றும் நடத்தையில் தென்படுவார்கள், அந்தளவு திரும்பவும் புது வண்ணத்தை (நிறத்தை) பார்ப்பீர்கள். ஒருவேளை நீங்களும் இருப்பதை போன்றே இருந்தீர்கள் என்றால் வண்ணமும் கூட அப்படியே இருக்கும். ஆகையால் தன்னிடத்தில் புதுமைத் தன்மையை கொண்டு வாருங்கள். குடும்பத்திலும் கூட மிக வேகமாக முயற்சியின் புது அலையை கொண்டு வாருங்கள். பிறகு வரும் நாட்களில் அதிசயமான காட்சியை பார்ப்பீர்கள். இதுவரை நடந்தது அனைத்துமே நடந்து முடிந்துவிட்டது, இப்பொழுது காரியத்திலும் புதுமை யான ஊக்க, உற்சாகம் என்ற சிறகுகளால் பறந்துக் கொண்டேயிருங்கள்.

மற்றப்படி யாரெல்லாம் சேவையில் ஒத்துழைப்பு கொடுத்தீர்களோ, அதாவது தனது பாக்கியத்தை சேமிப்பு செய்தீர்களோ, அதை நன்றாக செய்தீர்கள். உள்நாடு மற்றும் வெளிநாடு மற்றும் நாலாபக்கங்களிலுமுள்ள சேவாதாரிகள் சேவை செய்தார்கள், ஆகையால் சேவாதாரி களுக்கு பாப்தாதா எப்பொழுதும் இதைத் தான் சொல்கிறார் - சேவாதாரி என்றாலே பாக்கியத்தை பெறக்கூடிய பொன்னான வாய்ப்பாக இருக்கிறது. இப்பொழுது இந்த பாக்கியத்தை எங்கெல்லாம் செல்கிறீர்களோ, அங்கெல்லாம் அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள், குறைத்து விட வேண்டாம். சிறிது நேரத்திற்கான வாய்ப்பு சதா காலத்திற்கு தீவிர முயற்சியின் பொன்னான வாய்ப்பை கொடுக்கிறது. சேவாதாரிகள் யாரெல்லாம் சென்றுவிட்டார்களோ, அதாவது சென்றுக் கொண்டிருக்கிறார்களோ, அனைவருக்கும் வாழ்த்துக்கள். நல்லது.

கருணை மனமுடைய அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும், சதா தன்னை சுய

முன்னேற்றத் தில் பறக்கும் கலையில் அழைத்து செல்லக்கூடிய, தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு நேரமும் ஒரே ஒரு பாபாவோடு அனுபவம் செய்யக்கூடிய அனுபவம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா பாபாவின் மனதின் ஆசைகளை நிறைவேற்றக்கூடிய குலதீப ஆத்மாக்களுக்கு, சதா தன்னை மாலையின் நெருக்கத்தில் மணியாக இருக்கக்கூடிய வெற்றி ஆத்மாக்களுக்கு, எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வோடு ஒவ்வொரு நேரமும் பாபாவை பின்பற்றி பாபாவிற்கு சமமாக ஆகக்கூடிய மிக அன்பான வலது கரமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : பிராப்திகளை (பாக்கியத்தை) எமர்ஜ் (வெளிப்படுத்தி) செய்து சதா குஷியை அனுபவம் செய்யக்கூடிய சகஜயோகி ஆகுக.

சகஜ யோகத்தின் ஆதாரம் - அன்பு மேலும் அன்பிற்கான ஆதாரம் சம்மந்தமாகும். சம்மந் தத்தை நினைவு செய்வது எளிதாகும்., சம்மந்தத்தின் மூலம் தான் அனைத்து பிராப்திகளும் ஏற்படுகிறது. எங்கு பிராப்தி இருக்கிறதோ, அங்கு மனம், புத்தி எளிதாக சென்று விடுகிறது. ஆகையால் பாபா சக்திகளின், ஞானத்தின், குணங்களின், சுகம்-சாந்தியின், ஆனந்தம், அன்பின் பொக்கிஷத்தை கொடுத்திருக்கிறார். என்னவெல்லாம் விதவிதமான பிராப்திகள் இருக்கிறதோ, அந்த பிராப்திகளை புத்தியில் இமர்ஜ் (வெளிப்படுத்தினர்) செய்தீர்கள் என்றால் குஷியின் அனுபவம் ஏற்படும் மேலும் சகஜயோகி ஆகிவிடலாம்.

சுலோகன்: யார் அனைத்து கேள்விகளிலிருந்து விடுபட்டு இருக்கிறார்களோ, அவர்கள் தான் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறார்கள்.